செ.வெ.எண்: 42 நாள்: 18.10.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.10.2021) நடைபெற்றது.

வாராந்திர காணொளி மற்றும் நேரடி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து காணொளி காட்சி மூலம் மனுக்களும், மனு பெட்டி மூலமாக குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மொத்தம் **51** மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலா்களுக்கு மாவட்ட ஆட்சியர் டாக்டர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலா் திருமதி.வி.ஷகிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நோ்முக உதவியாளா் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.சௌமியா, மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலா் திரு.சீனிவாசன், மற்றும் அரசு அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**